# சித்ர வீணையில் சிந்தை குளிர்வித்தார்: பார்கவி பாலசுப்பிரமணியன், சூப்பர்!



சித்ரவீணை கலைஞர் பார்கவி பாலசுப்பிரமணியனின் இசை நிகழ்ச்சி டிரினிட்டி மிரர் கலை விழாவில் நேற்று மாலை நடந்தது. டாக்டர் நர்மதா வயலின் வாசித்தார். அக்ஷய் அனந்த பத்மநாபன் மிருதங்கம், சந்திரசேகர சர்மா கடம் பக்க வாத்யக் கலைஞர்கள்.

சித்ர வீணையும் வயலும் இணைந்து இசை இரட்டை தண்டவாளத்தில் (எக்ஸ்பிரஸ் சூப்பர் ஃபாஸ்ட் ரெயில் சொகுசுப் பயணத்தைப் போல சுகமோ சுகம். பார்கவி, டாக்டர் நர்மதா வாத்திய இசை மழையில் நனைய வைத்த கலைஞர்கள்.